**இலங்கை தேசிய ஒலிம்பிக் குழும் - 2021**

--------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் (''குழு'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, நிதிகள் மற்றும் ஒதுக்கங்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கலாக, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என

முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் குழு இணங்கியிருந்ததா என்பதும்,
- குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 14,920,228 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,329,390 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,409,162 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஆண்டின் போது செயற்பாட்டு செலவினம் ரூபா 46,700,534 ஆல் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு தேசிய விளையாட்டு சம்மேளனங்களில் இருந்து பெற வேண்டிய ரூபா 986,847 தொகையான கணக்குகள் இரண்டு | இந்த மீதியை அறவிடுவதற்கு அல்லது இரு சம்மேளனங்களினதும் வருடாந்த மானியத்தில் இருந்து இதனை கழிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் செய்து | பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்படாமல் நிலுவையாக இருந்தன. | வருகிறோம். எங்களால் அறவிட முடியாவிட்டால் நடைமுறை ஆண்டில் ஏறட்பாட்டை அல்லது பதிவழிப்பை மேற்கொள்வோம். | வேண்டும். |
| (ஆ) | ரூபா 435,374 தொகையான மூன்று மீளளிக்கக்கூடிய வைப்புக்கள் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் நிலுவையாக இருந்தன. | குறித.துக் கொள்ளப்பட்டது. இது 4 ஆண்டுகளாக நிலுவையாக உள்ளது. நடைமுறை ஆண்டில் தேவையான சீராக்கங்களைச் செய்வோம். | மீதியை விரைவாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 குறைப்பயன்பாடுடைய நிதிகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சர்வதேச ஒலிம்பிக் குழு விளையாட்டு வீரர்களை அவர்களின் விளையாட்டுக்காக தயார்படுத்தி மேம்படுத்தும் நோக்கத்திற்காக மீளாய்வாண்டில் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு ரூபா 4.5 மில்லியன் தொகையை வழங்கியிருந்தது. எனினும், குழு இதனை மேற்கூறிய நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் நிதிக்கூற்றுக்களில் பிற்போடப்பட்ட வருமானமாகக் காட்டியிருந்தது. | 2021 திசெம்பரில் எதிர்கால விளையாட்டு அபிவிருத்திகளுக்காக இந்த நிதி பெறப்பட்டது. கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, நாங்கள் இன்னும் இந்த நிதியைப் பயன்படுத்துகிறோம், மேலும் நாங்கள் பொருத்தமான திட்டங்களைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ளோம். சம்மேளனத்தின் பரிந்துரையின் பிரகாரம் விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி செய்வதற்கான தரவை பகுப்பாய்வு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளோம். | விளையாட்டு வீரர்களை அவர்களின் விளையாட்டுக்கு தயார்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் இந்த நிதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் இறுதியில், நேபாள ஒலிம்பிக் குழு 13வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் சந்தைப்படுத்தல் பங்காக இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு ரூபா 13.1 மில்லியன் தொகையை வழங்கியிருந்தது. பணம் பெற்று இரண்டு வருடங்களுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் மேற்படி சந்தைப்படுத்தல் பங்கு இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவினால் எந்தவொரு விளையாட்டு அவிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பயன்படுத்த திட்டமிட்டிருந்ததால் பெறப்பட்ட நிதி பிற்போடப்பட்ட வருமானமாக வைக்கப்பட்டது. அனைத்து இயக்கங்களையும் தடுக்கின்ற கொவிட் 19 மற்றும் பிந்தைய பொருளாதார நெருக்கடியால் அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் பிற்போடப்பட வேண்டியிருந்தது. ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு இந்த நிதியை நாங்கள் பயன்படுத்தாத சந்தர்ப்பத்தில் ஏதேனும் கணக்காய்வு ஐயவினாக்களை தடுக்க வேண்டுமென்றால் பொது வருமானத்திற்கு இதனைத் திரும்பப் பெறுவது எங்கள் நோக்கமாகும். | எந்த வகையான விளையாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத் திற்கும் நிதியைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| குழுவிற்கான பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறையான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | NOCSL செயற்திறனான வகையில் செயற்படுவதற்கு அதன் பதவியணியினரை மிகவும் கவனமாக முகாமை செய்து வருகிறது. | ஆக்கபூர்வமான மனித வள முகாமைத்துவ முறைமையை மேற்கொள்வதற்கு ஆட்சேர்ப்புக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

### 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டிணைந்த திட்டம் குழுவால் தயாரிக்கப்பட்டிருக்கவி ல்லை. | நாமும் இலாப அடிப்படையில் வணிகச் செயற்பாடுகளை மேற்கொள்ளாத ஒரு நிறுவனமாக இருக்கிறோம், அதுவும் எதிர்வரும் ஆண்டிற்கு உறுதியளிக்கப்பட்டு பெறப்படுகின்ற நிதிகளின் அடிப்படையில் எமது வருடாந்த பாதீடு/ மதிப்பீடுகளின் அடிப்படையில் செயற்படுகிறது. | குழுவின் எதிர்கால வழிகாட்டலை உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆம் ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் அடையக்கூடிய இலக்கு மற்றும் குறிக்கோள்கள் உட்பட அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டமொன்று குழுவால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 01/2014 பொது நிதிச் சுற்றறிக்கையின் கீழ் நாங்கள் நிர்வகிக்கப்படவில்லை. எனினும், ஆண்டிற்கான அனைத்து செயல்களையும் உள்ளடக்கிய ஒரு விரிவான வரவு செலவு திட்டம் ஆண்டு தொடங்கும் முன்னர் அங்கீகரிக்கப்படுகிறதுடன் SLNOC இடமிருந்து மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் EXCO இதை இலக்காகப் பயன்படுத்தியது. நாங்கள் அனைத்து செயல் விடயங்களுடன் விரிவான பாதீட்டை கொண்டுள்ளோம். | குழுவின் செயல்நடவடிக்கை திட்டத்தை தயாரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |